மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி
முன்னிலை திருமதி.ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.
2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஆடித்திங்கள் 30 -ஆம் நாள்.

IA.No. 54/2024
in
OS.No. 131/2018

Dr.SRV.தங்கமணி ...மனுதாரர் /வாதி

// எதிர்//

ஆர். மலர்க்கொடி ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனு அசல் வழக்கில் மன்னார்குடி சார்பதிவாளர் அவர்களை வாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படும் கிரய சாசனத்தில் மனுதாரர் கையொப்பம் செய்யவில்லை. மாவட்ட பதிவாளரின் உத்தரவின் அடிப்படையில் சார்பதிவாளரால் ஆவணம் கட்டாயப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின்

உண்மைதன்மையை நிரூபிப்பதற்கு மன்னார்குடி சார்பதிவாளர் அவர்கள் கடந்த 30.08.1996 ல் மாவட்ட பதிவாளர் வழங்கிய உத்தரவுபடி ஏற்பட்டுள்ள ஆவண எண்.1621/1997 கிரய சாசனத்தின் பதிவு தொடர்பான சார்பதிவக ஆவணங்களை முன்னிலைப்படுத்தி சாட்சியமளிக்க வேண்டி உரிய காலத்தில் சாட்சி பட்டியல் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மேற்படி சார்பதிவாளர் சாட்சியம் அசல் வழக்கில் மிக முக்கியமான சாட்சியம் என்பதால் வாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் தரப்பில் அளித்திருக்கும் சாட்சிப்பட்டியலில் கண்ட 30.08.1996 தேதியிட்ட ஆவண எண். 1621/1997 ல் பணியாற்றிய சார்பதிவாளர் யாரும் தற்போது பணியில்லை. பத்திரப்பதிவு சட்டப்படி ஓர் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை யார் வேண்டுமானாலும் முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளிக்கலாம். 1997 ல் பணியாற்றிய சார்பதிவாளரோ, மாவட்ட பதிவாளரோ யாரும் பணியில் இல்லை. மேலும் சாட்சிகள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்பதே கேள்விக்குறி ஆகும்.

மேற்படி ஆவணமானது வாதியால் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே ஆவணத்தின் அசல் பிரதிவாதியால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு பதிவு செய்யப்படட் ஆவணம் செல்லுமா, செல்லாதா என்பது குறித்து பதிவு செய்யப்பட்ட அலுவலரை விசாரித்து தீர்வு காணவேண்டிய அவசியம் கிடையாது. மேற்படி கடந்த 30.08.1996 ம் தேதியிட்ட ஆவணம் செல்லாது என கோரி வழக்கிட்டுவிட்ட அந்த ஆவணத்தை நிரூபிக்க சாட்சியமளிக்க கால அவகாசம் வேண்டும் என்று கூறியிருப்பது அசல் வழக்கை இழுத்தடிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் உள்ளது. ஆகவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**<u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபணவாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கில், வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ள நிலையில் தற்போது மீண்டும் சார்பதிவாளர் அவர்களை விசாரிக்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்.

இருதரப்பு வாதங்களும் கருத்திற்கொள்ளப்பட்டது. மனுதாரர்/ வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வாதி தரப்பு சாட்சிகளாக இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவாளர் அவர்களை ஆவண எண். 1621/1997 ஐ பொருத்து விசாரிக்க அனுமதி வழங்க கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதும், மனுதாரருக்கு அவரது தரப்பு கட்சிகளை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (12.06.2024) அவையறியப் பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

-